# பாரதியார் பல்கலை. முன்பு ஏப். 2-ல் தொடர் முழக்க போராட்டம்

**கோவை, மார்ச் 23:** ஆசிரியர் மற்றும் அலுவலக பணியாளர் நியமனத்தில் எஸ்சி, எஸ்டி, எஸ்சிஏ பிரிவினருக்கு இட ஒதுக்கீடு முறையை பின்பற்றாததைக் கண்டித்து ஏப்ரல் 2-ம் தேதி தொடர் முழக்கப் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

இதுதொடர்பாக, ஆதித்தமிழர் பேரவையின் கோவை மாவட்ட செயலர் சி.ராசன் வியாழக்கிழமை கூறியது:

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆசிரியர் மற்றும் அலுவலகப் பணியாளர் நியமனத்தில் எஸ்சி, எஸ்டி, எஸ்சிஏ பிரிவினருக்கு இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றாமல் பல்கலைக்கழக துணைவேந்தரும் பதிவாளரும் செயல்படுகின்றனர்.

இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றாததைக் கண்டித்து, பல்கலைக்கழகம் முன்பு ஏப்ரல் 2-ம் தேதி தொடர் முழக்கப் போராட்டம் நடத்தப்பட உள்ளது. மேலும், பணி நியமனத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர்களை மட்டும் நியமனம் செய்து வருகின்றனர்.

அதேபோல, கடைநிலை துப்புரவுப் பணியாளர்களுக்கு பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்காமல் துப்புரவுப் பணியிலேயே நீடிக்கச் செய்கின்றனர். அவர்களுக்கு போதிய பதவிஉயர்வு தர வேண்டும் என்று தெரிவித்தார்.

# பல்கலைக்கழகத்தை முற்றுகையிடும் போராட்டம்

## ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் தகவல்

கோவை, மார்ச்.23–

கோவையில் ஆதித்தமிழர் பேரவை நிறுவனத்தலைவர் அதியமான் நிருபர்களிடம் கூறியதாவது:–

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவிலும் மற்றும் தகுதி நிலை கண்டறியும் குழுவிலும் பட்டியல் இனத்தவருக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும். பல்கலைக்கழக மானியக்குழு தனது 11–வது ஐந்தாண்டு திட்டத்தில் பட்டியலின மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்தது குறித்து விசாரிக்க வேண்டும். பாரதியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணிகள் வழங்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் 400 தினக்கூலி பணியாளர்களில் பட்டியல் இனத்தவர் யாரும் இல்லை. எனவே பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 2–ந் தேதி பல்கலைக்கழகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# உள்ஓதுக்கீட்டை அமல்படுத்தாத பாரதியார் பல்கலைக்கழகம்

## ஆதித்தமிழர் பேரவையினர் போராட்டம் நடத்த முடிவு

கோவை, மார்ச் 22-

பாரதியார் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் உள்ளிட்ட பணி வாய்ப்புகளில் அருந்ததியர் உள்ஒதுக்கீட்டை அமல்படுத்த வலியுறுத்தி வரும் ஏப்ரல் 2ந்தேதி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக ஆதித் தமிழர் பேரவையின் சார்பாக தொடர் முழக்க போராட்டம் நடத்தப்படுகிறது.

இதுகுறித்து. ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் ஆர் அதியமான் கோவையில் பத்திரிக்கையாளர்களை வியாழனன்று சந்தித்து பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.



அருந்ததியர்களுக்கு 3 சதவிகித உள்ஒதுக்கீடு 2009-ல் மார்க்சிஸ்ட் கட்சி மற்றும் ஜனநாயக இயக்கங்களின் போராட்டங்களினால் நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆனால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்ட பதவிகளில் அருந்ததியர்களுக்கு வாய்ப்பு திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. குறிப்பாக கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் மொத்தம் 160 ஆசிரியர்கள் உள்ளனர். இதில் பட்டியல் இனத்தவர்கள் 32 பேர் உள்ளனர். ஆனால் அருந்ததியர் ஒருவர் மட்டுமே உள்ளார். இந்த சமூகத்தில் தகுதி உள்ளவர்கள் இருந்தும் பணி வாய்ப்பு மறுக்கப்படுகிறது. பல்கலைக் கழக மானியக்குழு தனது சுற்றறிக்கையில் வருகிற மார்ச் 31ந்தேதிக்குள் பட்டியல் இன பின்னடைவுக் காலிப்பணியிடங்களை சிறப்பு நியமனத் தேர்வின் மூலம் நிறைவு செய்ய ஆணையிட்ட பிறகும் நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல், 11வது ஐந்தாண்டு திட்டத்தில் பட்டியல் இன மாணவர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதி சுமார் ரூ.1.5 கோடியை மாணவர்களின் குறைகளைவு பயிற்சி வகுப்புகள் நடத்த ஒதுக்கப்பட்டது. ஆனால் 5 ஆண்டுகளாக செலவிடப்படாமல் நிதி ஆண்டு இறுதியில் அவசர, அவசரமாக ஆணையிடப்பட்டுள்ளது. இது நிர்வாகத்தின் திட்டமிட்ட சூழ்ச்சியாகும். மேலும். பாரதியார் பல்கலைக்கழத்தின் ஆட்சி மன்றக் குழுவிலும் மற்றும் தகுதி நிலை கண்டறியும் குழுவிலும் பட்டியல் இனத்தோருக்கு எந்த பிரதிநிதித்துவமும் வழங்கப்படவில்லை

இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் சுமார் 400 தினக்கூலிப் பணியாளர்களில் பட்டியல் இனத்தவர்களும், அருந்ததியர்களும் கிடையாது. துணை வேந்தர் அறையில் திறந்து வைக்கப்பட்ட அம்பேத்கர் படமும். பெரியார் படமும் திட்டமிட்டு அகற்றப்பட்டுள்ளது. எனவே. பாரதியார் பல்கலைக்கழகத்தில் உள்ஒதுக்கீட்டை அமல்படுத்தக்கோரி ஆதித்தமிழர் பேரவையினர் மற்றும் ஜனநாயக அமைப்புகளை இணைத்துக் கொண்டு ஏப்ரல் 2ந்தேதி பல்கலைக்கழகம் முன்பு தொடர் முழக்கப் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார். இச்செய்தியாளர் சந்திப்பின் போது. ஆதித்தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் நாகராஜன் உடன் இருந்தார்.

பின் சார்பில்

தீக்கதிர் | 23-3-2012 | கோவை

# BU flouting reservation norms: Peravai

Staff Reporter

COIMBATORE: Aathithamizhar Peravai has alleged that the appointments made in Bharathiar University are not conforming to reservation norms, and more specifically 'gross injustice' has been meted out to those belonging to Scheduled Castes. .

Pointing out irregularities in the appointments, the Peravai's founder R. Adhiyamaan told a press conference here on Thursday that almost all appointments, from the daily wage employees to professors, flouted the reservation norms. Among the 400 daily wage employees, there was not even a single person belonging to the Scheduled Castes and among the 160 teaching staff, there was only a single person belonging to that community.

"Even among the Backward Classes, a particular community has been given preference. The 200-point roster system has not been followed by the university. The eligibility criteria have also been violated.

The officials concerned should take note of these and take appropriate action immediately. These irregularities should not get buried with the tenure of these officials coming to an end," Mr. Adhiyamaan said.

The Peravai was planning a protest in front of the university on April 2.